**செ. கு. எண்**:123 **நாள்**: 11.9.2011

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 11.9.2011

9.9.2011 அன்று ராமநாதாபுரம் மாவட்டம் பச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கவேலுவின் மகனும், ஆனைக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் +1 படித்து வந்த மாணவருமான திரு. பழனிகுமார், முத்துராமலிங்கபுரத்தில் நடைபெற்ற நாடகத்தை பார்த்துவிட்டு நள்ளிரவில் ஊருக்கு திரும்பிக் கொண்டிருக்கையில், பச்சேரி அருகில் சில நபர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து நான் சொல்லொணாத் துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

இந்தக் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தக் கொடூரச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவன் பழனிக்குமாரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பழனிக்குமாரின் குடும்பத்திற்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.